# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1783/39 - 2012 නොවැම්බර් 09 වැනි සිකුරාදා - 2012.11.09

*1783/39 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து சொல்லப்படவேண்டிய 255 ஆம் அதிகாரத்தின் படி நகர சபை கட்டளைச் சட்டத்தின் 154 வது உறுப்புரிமையின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல்*

*255 ஆம் அதிகாரம் கொண்ட நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 (14அ) வது உப பிரிவின்படி சொல்லப்பட வேண்டிய அதே சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பாணந்துறை நகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அந்த நகர சபையினால் உருவாக்கப்பட்ட இங்கே கீழே குறிப்பிடப்பட்டு உள்ள துணைவிதி யாப்பு 2011.11.29 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தில் இலக்கம் 4.1 ஆகிய பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கொண்ட மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2வது பிரிவில் சொல்லப்பட வேண்டிய மேலே உள்ள 255 வது அதிகாரத்தின்படி நகர சபை கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் அதன் துணைவிதி யாப்பு மேல் மாகாண சபையின் முதலமைச்சர், நிதி திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டு மற்றும் வர்த்தக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டு உள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம்,
ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,
மின்சக்தி மற்றும் எரிசக்தி,மனிதவலு,
வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டு மற்றும் வர்த்தக அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 7,
2012, நவெம்பர் 07.

**பாணந்துறை நகர சபை**

முச்சக்கர வண்டிகள் நிறுத்துதல் விடயம் சம்பந்தமான துணைவிதி

1. இத்துணைவிதி பாணந்துறை நகர சபையின் முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைப்பதை பற்றிய துணைவிதி என்று அறிமுகப்படுத்தப்படும்.

2. இத்துணைவிதி சபையின் அதிகார எல்லைக்குள் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்பாடு செய்தல் மற்றும் நிறுத்தி வைக்கும் இடத்திற்கான கட்டணம் அறவிடுதல் தொடர்பாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. (1) சபையின் அதிகார எல்லைக்குள் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கக்கூடிய இடங்கள் மற்றும் அவ்வாறான ஒவ்வொரு இடங்களிலும் நிறுத்தி வைக்கக்கூடிய ஆகக் கூடிய முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கையை சபையில் பிரேரணையொன்றை உடன்படிக்கை நிச்சயிக்கப்பட வேண்டியிருப்பதோடு, தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது அதில் குறிப்பிடப்படும் உரிய திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

(2) மேற்குறிப்பிடப்பட்டுள்ள 3(1) சரத்தின்படி தீர்மானிக்கப்பட்ட முச்சக்கர வண்டி நிறுத்திவைக்கப்படும் இடங்களும் எண்ணிக்கையும் திருத்தப்பட வேண்டும் என கருதினால் சபையின் இணக்கத்துடன் அவ்வாறு செய்ய முடியுமாவதோடு அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து அமுலாகும்.

(3) முச்சக்கர வண்டிகள் தரிப்பிடங்களைத் தீர்மானித்தல், அதன் இடப்பரிமாணத்தை கணித்தல் மற்றும் அங்கு நிறுத்தக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் அல்லது அத்தீர்மானத்தை திருத்துதல் ஆகியவைகளுக்கு முதலாவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களைக் கொண்ட கமிட்டியின் விதந் துரைத்தலை சபை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(4) 3 (1) உப விதியின் முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கப்பட வேண்டிய இடங்களை இனங்கண்டு கொள்வதற்கு சகல தரிப்பிடங்களின் முன்னாலும் அறிவித்தல் பலகையொன்று பொருத்தப்பட வேண்டியுள்ளதோடு அறிவித்தல் பலகையின் தரிப்பிடத்தின் உரிய குறியீட்டு இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும்.

3 (2) உப விதியின்படி தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கக்கூடிய முச்சக்கர வண்டிகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை அறிவித்தல் பலகையில் காட்டப்பட வேண்டும்.

(5) தரிப்பிடங்களில் முச்சக்கர வண்டிகள் முறையாக நிறுத்தி வைக்கப்பட வேண்டியுள்ளதோடு, சபையினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரி ஒருவரால் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய முறையைக் காட்டக்கூடிய 4 அங்குல அகலமுள்ள வெள்ளை அல்லது மஞ்சள் நிறக்கோடொன்றின் மூலம் அவ்விடம் அடையாளம் இடப்பட்டிருக்க வேண்டும்.

4. நகர சபை முச்சக்கர வண்டிகள் நிறுத்தப்படுவதற்காக துணை விதி இரண்டாம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சபையின் தலைவரால் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படுவதுடன், அதற்கென கட்டணமொன்றை விதித்து அறவிடுவதும் சட்டரீதியானதாகும்.

5. முச்சக்கர வண்டிகள், தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும்போது தரிப்பிடத்திற்கு மிக அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

6. (1) மூன்றாவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி தங்களது நிரந்தர வதிவிடத்திற்கு மிக அண்மிய முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தில் நிறுத்தி வைப்பதற்காக நகர சபையிடமிருந்து அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க வேண்டியுள்ளதோடு, அதற்கான விண்ணப்பப் படிவத்தை ரூபா 50 செலுத்தி சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த விண்ணப்பக்கட்டணம் சபையின் தீர்மானத்துக்கு அமைய காலத்திற்கு காலம் எடுக்கும் தீர்மானங்களுக்கேற்ப இக்கட்டணங்களுக்கான திருத்தங்கள் மேற்கொள்ள முடியும்.

(2) முச்சக்கர வண்டியை செலுத்துபவர் உரிமையாளராயின் அவருடைய ஆவணங்களினதும் செலுத்துனர் வாடகை சாரதியாயின் அவருடையதும், உரிமையாளரினதும் பின்வரும் அந்த விண்ணப்பப்படிவம் போட்டோ பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பப்பத்திரம் மூன்றாவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைந்திருக்க வேண்டும்.

i. முச்சக்கர வண்டி உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை மற்றும் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்;

ii. முச்சக்கர வண்டியின் பதிவுச் சான்றிதழ்;

iii. வாடகைச் சாரதியின் தேசிய அடையாள அட்டை மற்றும் செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

(3) சபையிலிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட முச்சக்கர வண்டிகள் சம்பந்தமாக பதிவேடு ஒன்றை வைத்திருத்தல் வேண்டியதுடன், அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அதைப்பற்றிய குறிப்பு எழுதப்பட்டு சிவப்பு மையினால் அடையாளமிடப்பட வேண்டும்.

(4) சபை மூலம் முச்சக்கர வண்டிகள் நிறுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் மாதாந்தம் அல்லது காலாண்டிற்கு அல்லது ஆண்டிற்கொருமுறை வழங்க முடியும்.

(5) சட்டப்படி சரியான அனுமதிப்பத்திரத்தின் போட்டோ பிரதியொன்றை நன்றாக வெளியில் தெரியக்கூடியவாறு முச்சக்கர வண்டியின் முன்பக்க கண்ணாடியில் ஒட்டி காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(6) முச்சக்கர வண்டியின் வலது பக்கத்தால் பிரயாணிகள் ஏறவோ இறங்கவோ முடியாதவாறு மூடப்பட்டிருக்க வேண்டும்.

(7) அனுமதிப்பத்திரம் முச்சக்கர வண்டியின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் பெயருக்கு வழங்கப்பட வேண்டும்.

(8) அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் கால எல்லை முடிவடைவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்துக்கொள்ள முச்சக்கர வண்டி உரிமையாளர் மூலம் செய்யப்பட வேண்டும்.

(9) மேற்குறிப்பிடப்பட்டுள்ள 6.4 உப பந்தியில் மாதாந்தம் அல்லது காலாண்டிற்கு அல்லது ஆண்டொன்றிற்கு விதித்து அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளதோடு, அத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியில் அல்லது அதில் குறிப்பிடப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு அறவிடப்பட வேண்டும்.

(10) 4 வது துணைச்சட்டத்தின்படி சபையினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று இல்லாத நிலையில் முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை உட்செலுத்துதல் அல்லது நிறுத்தி வைத்தல் செய்யலாகாது.

(11) வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்று இருப்பினும் கூட பொலிஸ் அதிகாரி ஒருவரால் அல்லது சபைத்தலைவரால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரியால் முச்சக்கர வண்டி தரிப்பிடத்திலிருந்து முச்சக்கர வண்டிகளைத் தற்காலிகமாக அகற்றுமாறு கட்டளையிட அதிகாரம் இருப்பதோடு அனுமதிப்பத்திரம் இதற்குத் தடையாக அமையக்கூடாது.

7. தரிப்பிடமொன்றில் வேறு வாகனமொன்றை உட்பிரவேசித்தல் அல்லது நிறுத்தி வைத்தல் கூடாது.

8. தரிப்பிடத்திற்கு உட்பிரவேசிக்கும் இடத்தில் அல்லது அதிலிருந்து வெளியேறும் இடத்திற்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் முச்சக்கர வண்டிகளை அல்லது வேறு வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது.

9. தரிப்பிடத்திலிருந்து முச்சக்கர வண்டியை வெளியேற்றும் நடவடிக்கைகளுக்குரிய ஏதாவது திருத்த வேலைகள் இருந்தாலேயொழிய, தரிப்பிடத்தினுள் வேறு எவ்விதமான திருத்த வேலைகளையும் மேற்கொள்ளக்கூடாது.

10. ஏதாவது ஒரு முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி வைப்பது தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் குறிப்பிட்ட தரிப்பிடத்திற்கு அந்த அனுமதிப் பத்திரம் தொடர்புடைய தரிப்பிடம் தவிர்ந்த வேறு எந்தவொரு இடத்தினுள் கூலி பிரயாணமொன்று முச்சக்கர வண்டியொன்றை நிறுத்தி வைத்திருத்தல் கூடாது.

11. முச்சக்கர வண்டிகள் நிறுத்துவது தொடர்பாக இந்த துணைவிதி வாரத்தில் எல்லா நாட்களிலும் 06.00 மணி தொடக்கம் 20.00 மணிவரை அமுலில் இருத்தல் வேண்டும்.

(1) மேல் குறிப்பிட்ட 11 வது துணைவிதியில் கூறப்பட்ட நேரங்கள் சபையின் தேவைக்கு ஏற்ப சபை பிரேரணை இணக்கப்பாடொன்றின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதோடு அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் ஒன்றின் மூலம் பிரகடனம் செய்யப்பட்ட பின்பு அமுல்படுத்தப்படல் வேண்டும்.

12. அனுமதிப்பத்திரமுள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கும் சந்தர்ப்பத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் சாரதிகள், வெளியாட்களை முச்சக்கர வண்டி நிறுத்தும் தரிப்பிடத்துக்கு அழைத்து தேவையின்றி சுற்றித்திரிய இடமளிக்கக்கூடாது.

13. தரிப்பிடமொன்றில் ஏதாவது ஒருவர் மூலம் போதைப்பொருள் பாவித்தல் அல்லது தவறான நடவடிக்கையில் ஈடுபடுதல் அல்லது வேறு ஏதாவது துன்பம் விளைவிக்கும் செயற்பாடு செய்யாமல் இருப்பதோடு அவ்வாறு செயல்கள் செய்ய இடமளிக்காமல் இருப்பதற்கு தரிப்பிடம் பாவிப்பதற்கு அனுமதிபெற்ற நபர்களின் பொறுப்பாகும்.

*(14)* அனுமதிப்பத்திரம் உள்ள யாராலும் ஒருவர் மூலம் தரிப்பிடத்தில் தவறான நடத்தையில் ஈடுபட்டதாக மக்களிடமிருந்தும் முறைப்பாடு ஒன்று கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அதைப்பற்றிய விசாரணை ஒன்றை நடத்தி உறுதிப்படுத்தப்பட்டால் அவருடைய அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் சபைக்கு உண்டு.

*(15)* தலைவரோ அல்லது அவர் மூலம் அது தொடர்பான நடவடிக்கைகளுக்காக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரி மூலம் அல்லது பொலிஸ் அதிகாரியொருவரோ கேட்கக்கூடிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செல்லுபடியாகும் மூலப்பிரதியை முச்சக்கர வண்டி சாரதி அல்லது உரிமையாளர் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

*(16)* இந்த துணைச்சட்டத்தில் ஏதாவதொரு ஏற்பாடொன்றை மீறுதல் குற்றமாவதோடு, அந்தக் குற்றம் தொடர்பாக அதிகாரம் உள்ள நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக செய்யப்பட்டபின் எழுநூற்று ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத அபராதமொன்றிற்கு உட்படுத்த முடியும். அவ்வாறான மீறல்களுக்கு செய்யும் குற்றம் தொடர்ந்து செய்துகொண்டு போகும் சந்தர்ப்பத்தில் உரிய நீதிமன்ற அதிகாரமுள்ள நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக்கியபின் அல்லது அம்மீறல் குற்றத்திற்கு பணம் செலுத்தும்படி எழுத்து மூலமான அறிவிப்பொன்றை தலைவர் மூலமாக அல்லது இந்த நடவடிக்கைகள் அவருடைய அதிகாரம்பெற்ற அதிகாரியோ அல்லது பொறுப்பேற்றுக்கொண்டபின் அல்லது அந்த குற்றம் மேலும் ஒவ்வொரு தினம் தொடர்பாக இருநூற்று ஐம்பது ரூபாவுக்கு மேற்படாமல் மேலதிக தண்டமொன்றிற்கு தண்டிப்பதற்கு உட்படுவராவார்.

*(17)* இந்த விதியில் மாறாக ஏதாவது முரணாக குறிப்பிடப்பட்டிருந்தாலுங்கூட சபையின் ஏகமனதான தீர்மானத்தின் மூலம் இந்த விதியை திருத்துவது அல்லது வலுவற்றதாக்கி புதிய விதி ஒன்றை உருவாக்குதல் மேலதிக துணைவிதி ஒன்றை உருவாக்குதல் முடியும்.

*(18)* **பொருள்கோடல்:**

"சபை" என்பது பாணந்துறை நகர சபை என்றும்.

"தலைவர்" என்பது பாணந்துறை நகர சபை தலைவர் என்றும் தலைவர் மூலம் உரிய நடவடிக்கைகளுக்கு அதிகாரம் ஒப்படைப்பு செய்யப்பட்ட அதிகாரம் உள்ள அதிகாரி என்றும் தலைவர் அவர்களால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட நகர சபையின் எந்தவொரு அதிகாரியொருவரையும்

"தலைவர்" மூலம் உரிய நடவடிக்கைகளுக்காக அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் உள்ள என்றும் தலைவர் மூலம் எழுத்து மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட நகரசபை நிரந்தர பதவி வகிக்கும் அதிகாரி ஒருவரென்றும்.

"அதிகார பிரதேசம்" என்பது 255 வது அத்தியாயத்தின் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க கொண்ட நகரசபை கட்டளைச் சட்டத்தில் 2வது பிரிவின்கீழ் நிறுவி 1978, ஒகத்து 10 கொண்ட திகதி உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாண அமைச்சர் மூலம் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பாணந்துறை நகர சபையின் அதிகாரப் பிரதேசம் ஆகும்.

"முச்சக்கர வண்டி" என்பது வாடகைப் பிரயாணமொன்றை எதிர்பார்த்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டியென்றும்.

"வாடகைச் சாரதி" என்பது முச்சக்கர வண்டியை செலுத்தும் உரிமையாளர் அல்லது அந்த வாகனத்தை செலுத்துவதற்காக உரிமையாளர் மூலம் நியமிக்கப்பட்டுள்ள ஒருவரும்.

"தரிப்பிடம்" என்பது பாணந்துறை நகரசபை மூலம் முன்மொழிவு உடன்படிக்கை மூலம் உறுதி செய்யப்பட்ட முச்சக்கர வண்டி தரிப்பிடத்தையும்.

"குறிப்பிட்ட தரிப்பிடம்" என்பது பாணந்துறை நகரசபையின் தலைவர் தலைவர் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்ட எந்தவொரு தீர்மானிக்கப்பட்ட தரிப்பிடமும்.

"மாதாந்தம்" என்பது ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் முதலாம் திகதியிலிருந்து அந்தந்த மாதங்களுக்குரிய 28 நாட்கள் அல்லது 30 நாட்கள் மற்றும் 31 நாட்கள் கொண்ட மாதத்தையும்,

"காலாண்டு" என்பது மாதாந்தம் என்ற பொருள்கோடல் மூலம் கொடுக்கப்பட்டுள்ள நாட்கணக்கு உள்ள ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு அருகாமையில் 03 மாதங்கள் வீதம் திசெம்பர் 31 ஆந் திகதி வரையுமாகும்.

"வருடாந்தம்" என்பது வருடத்தின் ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் காலண்டர் வருடமொன்றையும்,

"பொலிஸ் அதிகாரி" என்பது 53 என்ற அதிகார 1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 104 வது அத்தியாயம் ஊடாக கொடுக்கப்பட்ட அதே பொருள்கோடலாகும்.

"வேறு வாகனங்கள்" என்பது மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின் மூலம் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள பொருள்கோடலாகும்.

"பதிவு செய்யப்பட்டுள்ள உரிமையாளர்" என்பது மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின் மூலம் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள அதே பொருள் கோடலாகும்.

"துன்புறுத்தும் நடவடிக்கைகள்" என்பது துன்புறுத்தல் கட்டளைச் சட்டத்தின் மூலம் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள அதே பொருள்கோடல் என்ற கருத்தாகும்.

19. இந்த துணைவிதி சிங்கள மற்றும் தமிழ்மொழி வாக்கியங்கள் தொடர்பாக எந்தவொரு முன்னுக்குப்பின் முரணான கருத்து ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழி வாக்கியமே மேலோங்கியிருக்கும்.

**முதலாவது அட்டவணை**

*3.3 துணைவிதி*

நியமிக்கப்படும் வீதி குழு பின்வரும் அங்கத்தினர்களைக் கொண்டதாயிருக்க வேண்டும்:-

1. குழுவின் தலைவர் நகர சபையின் தலைவராக இருப்பதோடு செயலாளர் சபையின் வருமானப் பரிசோதகராய் இருத்தல் வேண்டும்.
2. நகர சபையின் செயலாளர் மற்றும் தொழிநுட்ப அதிகாரி
3. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர்.
4. மாகாணத்தினுள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர்.
5. களுத்துறை வீதி போக்குவரத்து பிரயாணிகள் அதிகார சபையின் தலைவர் அல்லது் அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர்.
6. இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் அல்லது அவர் மூலம் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர்.
7. சபையின் அதிகார எல்லைக்குள் பொலிஸ் நிலையங்களின் மோட்டார் வாகனப் போக்குவரத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் அ்ல்லது அவர்கள் மூலம் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர் அடிப்படையில்.
8. சபையின் அதிகார பிரதேசத்துக்குள் உள்ள பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிச் சங்கங்களிலிருந்து ஒரு அங்கத்தவர் வீதம்.

**இரண்டாம் அட்டவணை**

*4வது துணைவிதி*

பற்றுச்சீட்டு இலக்கம்
Receipt No.

இலக்கம்
No.

முச்சக்கர வண்டிகள் தரிப்பிட அனுமதிப்பத்திரம்

பெயர்:
குறியீடு இலக்கம்: (அடையாள இலக்கம்)
கட்டணம்:
தரிப்பிடம்:
செல்லுபடியாகும் காலம்:
திகதி:

தலைவர்,
பாணந்துறை தலைவர் நகர சபை.

செ.மீ. 13 இன் விட்டத்தைக் கொண்ட வட்டமாகும்.

பின்னணி மஞ்சள் (Yellow Colour) அல்லது நிறத்தைக்கொண்ட அமைப்பு ரீதியான விடயங்கள் அடங்கிய இஸ்டிகர் ஆகும்.

***மூன்றாம் அட்டவணை***

*6.2 துணைவிதி*

*முச்சக்கர வண்டி தரிப்பிட அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்வது தொடர்பாக விண்ணப்பப்படிவம்*

1. (i) விண்ணப்பதாரியின் பெயர்:----.

(ii) நிரந்தர வசிப்பிட முகவரி:----.

(iii) வரி மதிப்பீட்டு இலக்கம் :----.

(iv) நிரந்தர வசிப்பிடத்துக்குரிய உள்ளூராட்சி மன்றம் :----.

(v) தேசிய அடையாள அட்டை இலக்கம்:----.

2. (i) முச்சக்கர வண்டி பதிவு இலக்கம்:----.

(ii) ஓட்டுனர் உரிமையாளராக இல்லாவிட்டால் கூலி சாரதியா என்பது:----.

(1) உரிமையாளராயின் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்:----.

(2) கூலி சாரதியாயின் :-

(அ) சாரதியின் பெயர்:----.
(ஆ) நிரந்தர வதிவிட முகவரி:----.
(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம்:----.
(ஈ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்:----.

(3) அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பம் செய்யும் முச்சக்கர வண்டி தரிப்பிடம் :----.

(4) அனுமதிப்பத்திரம் கோரும் காலம்:- மாதத்துக்கு/மூன்றுமாதத்துக்கு/வருடத்துக்கு

இங்கு என்னால் மேற்கூறப்பட்ட தகவல்கள் பிழையற்றவை எனவும் எக்காரணம் கொண்டும் அந்த தகவல்கள் பொய்யானது என்று கண்டுபிடிக்கப்பட்டால் என்னுடைய முச்சக்கர வண்டி தரிப்பிடம் அனுமதிப்பத்திரம் முன்னறிவித்தல் இன்றி இரத்துச் செய்யப்படுவதற்கு உட்படுவதோடு, நகரசபை மூலம் விதிக்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டி நிறுத்தல் தொடர்பாக துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கடைப்பிடிக்க உடன்படுகிறேன்.

திகதி:----.

----.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திரு/திருமதி ........................................ அவர்களுக்கு .......................... இலக்கத்தைக்கொண்ட முச்சக்கர வண்டியை ......................... தரிப்பிடத்தில் நிறுத்துவது தொடர்பாக அனுமதிப்பத்திரம் .................................................. காலத்திற்கு வழங்க அனுமதிக்கின்றேன்.

திகதி:----.

தலைவர்,
பாணந்துறை நகர சபை.

*11-923*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.